2010 மே 4]
132—

போக்குவரத்து வசதி

***5011—திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், போக்குவரத்தினை மேம்படுத்திடவும், சென்னை மாநகரப் போக்குவரத்துக் காவல் துறையும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமும் மற்றும் சென்னை மாநகராட்சியும் அவ்வப்போது கலந்தாலோசித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற சூழ்நிலையில், பெரம்பூர் மேம்பாலத்தைக் கட்டி முடித்தவுடன் போக்குவரத்து நெரிசல் மிகவும் குறைந்திருக்கிறது. வடசென்னை மக்களின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய அந்த மேம்பாலத்தைக் கட்டி சுமார் 50, 60 ஆண்டு காலமாக இருந்த மக்கள் கனவை நனவாக்கிய நம்முடைய தமிழகத்தின் முதல்வரும், எங்களுக்கெல்லாம் குடும்பத் தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றிலேயே சக்கர நாற்காலியில் சுழன்று வந்திருக்கிற சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற நமது முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய கழகத்தின் பொருளாளரும், தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்கள் உழைப்பு, உழைப்பு உழைப்பு என்று உயர்ந்து வந்திருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தளபதி

[2010 மே 4

அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடின உழைப்பின்மூலம் உயர்ந்தவர் என்று வடசென்னை மக்களே சொல்வார்கள். அந்த மேம்பாலத்தைக் கட்ட முடியாது, முடியாது என்று சொன்னவர்களுக்கெல்லாம், அவர்கள் மூக்கின் மேல் விரலை வைக்கும் அளவிற்கு முடியும், முடியும் என்று முடித்துக் காட்டிய வரலாறு நம்முடைய தளபதி அவர்களைச் சேரும். 51 கோடி ரூபாயில், நம்முடைய தளபதி அவர்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாபு, கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் தான் சொல்கிறேன் இல்லையா?

முற்பகல் 9-40

திரு. வி.எஸ். பாபு: அந்த மேம்பாலத்தைக் கட்டி முடித்து, வடசென்னை மக்களுக்கு மட்டுமல்ல, தென்சென்னை மக்களுக்கும் சேர்த்து, சென்னை மாவட்டத்திற்கே ஒரு சிறப்பு சேர்த்துக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும் சென்னை மாவட்டத்தின் சார்பில் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்றைக்கு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல், போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறைந்தாலும், பறக்கும் இரயில் திட்டத்தையும் விரைவாக முடித்துக் கொடுத்தால், போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும்.

நம்முடைய தலைவர் சொன்னதுபோல, auto permit-ஐ போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதிகப்படுத்திக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். போக்குவரத்து நெரிசலை இன்னும் வெகுவாகக் குறைக்க share auto-க்களை அதிகப்படுத்தி, அதற்கும் permit வழங்கினால், நிச்சயமாக சென்னை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசல் இன்னும் குறையும் என்பது எங்களுடைய கருத்து. அதேபோல், இருக்கின்ற சுற்று வட்டாரத்திலுள்ள சாலைகளில் எல்லாம், பிரதான சாலைகளில் எல்லாம் இப்போது நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதிக அளவிலே பேருந்துகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தலைவர், தளபதி ஆகியோரின் ஆலோசனையின்பேரில் இன்னமும் வழங்க இருக்கின்றார்கள்.

2010 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.எஸ். பாபு, கேள்வி மட்டும் கேளுங்கள். விவாதத்தில் பேசுகிற மாதிரி பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. வி.எஸ். பாபு: ஆகவே, அதிக அளவில் auto permit வழங்குவதைப்போல share auto-க்களை அதிகப்படுத்தி, அதற்கும் permit வழங்குவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல share auto-க்களுக்கு வழங்குகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை. Share auto-க்களை அதிகப்படுத்துகின்றபோது போக்குவரத்துக் கழகம் பாதிக்கப்படும், கழகப் பேருந்துகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் share auto-க்களுக்கு வழங்குவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

அதற்கு மாறாக, இப்போது 'Connecting service' என்ற வகையிலே, குறுகிய சந்துகளிலிருந்து நேரடியாகப் பேருந்து நிலையம் வரை சிறிய மினி பேருந்துகளை நமது மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகவே இயக்குவதற்கான திட்டம் தமிழக அரசிலே இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே, இந்த ஆண்டு, இன்னும் மூன்று மாத காலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் துவக்கி வைக்க இருக்கிறார்கள். குறிப்பாக, சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், 'Unified Metropolitan Transport Authority' என்று ஒரு புதிய குழுமத்தை நியமிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசிடம் மத்திய அரசு சொல்லி, தமிழ்நாடு அரசும் போக்குவரத்துத் துறை அமைச்சரின் தலைமையிலே, நம்முடைய தலைமைச் செயலாளர் துணைத் தலைவராக, சென்னை மாநகரத்தினுடைய மேயர் அவர்கள் துணைத் தலைவராக, காவல் துறை அதிகாரிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் இந்தக் குழுவிலே இடம்பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழு ஒரு விரிவான திட்டத்தை

ஏற்பாடு செய்திருக்கிறது. அந்தக் குழுவிற்கு சட்ட அங்கீகாரம் கொடுப்பதற்குக்கூட விரைவிலே சட்டமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கிறார்கள். அந்தக் குழுவினால் மொத்தம் 16 ஆண்டு காலத்தில் சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக 88,200 கோடி ரூபாய் செலவிலே ஒரு பெரிய திட்டம் இன்றைக்குத் தீட்டப்பட்டிருக்கிறது. இப்போது அது நடைமுறைக்கு வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகும். அதற்குள்ளாக நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், அவர்கள் சென்னை மாநகரத்தின் மேயராகப் பொறுப்பேற்றுக்கொண்ட 1996-2001 முதல் 19 பாலங்களைக் கட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2006-2010 வரை, 7 பாலங்களைக் கட்டியிருக்கிறார்கள். தற்போது, 9 பாலங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைக் காட்டிலும், 25 சாலைகளை அகலப்படுத்துகின்ற பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைவிட, நம்முடைய தலைவர் முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் பெருநகர இரயில் திட்டத்தைச் செயல்படுத்தி, அதுவும் ஜப்பான் நாட்டு நிதியுதவியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 16,283 கோடி ரூபாய் செலவிலே 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்னொன்று, 62 கிலோ மீட்டர் வெளிவட்டச் சாலை, சுற்றுச் சாலை அமைக்கின்ற பணியும் செயல்படுத்தப்படவுள்ளது. அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளன. எனவே, இப்போது நம்முடைய துணை முதலமைச்சர் மேயரை அழைத்து, எங்கெங்கு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்த ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றவும், Multi-level Car Parking வைப்பதற்கு தியாகராய நகர்ப் பகுதியிலும், பல்லவன் போக்குவரத்துக் கழகம் போன்ற போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான இடங்களிலும் கீழே பேருந்து நிலையமும், மேலே Car Parking-ம் என்ற அளவிலே போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும், காரை நிறுத்துகின்ற இடவசதியும் செய்வதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகரில் மொத்தம் 207 இடங்களில் போக்குவரத்து சிக்னல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேவைப்படின், இன்னும் சிக்னல்கள் அமைத்து, போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக

2010 மே 4]

அரசு இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும், டெல்லியில் இருப்பதுபோல விரைவுச் சாலை அமைக்கப்படுமா? அதேபோல், இரு சக்கர வாகனங்களுக்குத் தனிப் பாதை அமைத்துக் கொடுக்க நெடுஞ்சாலைத் துறையுடன் போக்குவரத்துத் துறையும் இணைந்து செயல்பட்டு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து நேரடியாக துறைமுகம் வருகின்ற அந்த விரைவுச் சாலையின் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடன், பெரும்பகுதியான நெரிசல்கள் நகரத்திற்குள்ளே ஏற்படுவது தவிர்க்கப்படும். மேலும், இப்போது அவர்கள் சொன்னதுபோல, அந்த விரைவுச் சாலை மட்டுமல்ல, மற்ற பணிகள் எது, எது தேவை என்று கருதுகிறோமோ, அவற்றிற்கெல்லாம் கூட்டங்கள் மாதம் ஒரு முறை கூட்டப்பட்டு, அனைத்து அதிகாரிகளையும் கலந்தாலோசித்து உடனுக்குடன் அவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துகொண்டே போகின்றது. அதனால் பஸ் கட்டணமும் உயர்ந்துவிட்ட நிலையில், அரசு குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியைப் பயணிகளின் வசதிக்காக இயக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 மே 4

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு விஷயத்தில் சரியாக இருக்கிறார். பஸ் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்று ஆதாரபூர்வமாக, அரசாணையோடு எத்தனை முறை வெளியிட்டாலும், அதை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. பஸ் கட்டணம் உயர்ந்துவிட்டது என்று சொல்கின்றார். எனவே, நான் மீண்டும் சொல்கின்றேன், எந்தக் கட்டணமும் நீங்கள் அளித்த அந்த ஆணையின்பேரில்தான் வசூல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, கட்டணம் உயர்த்தப்படவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், நீங்கள் பார்த்தீர்களேயானால், two wheeler, three wheeler, four wheeler என்று தினந்தோறும் நாளொன்றுக்கு தமிழ்நாட்டில் 3,825 வாகனங்கள் சராசரியாக பதிவாகிக் கொண்டிருக்கின்றன. மாதம் 80,000-லிருந்து 90,000 வாகனங்கள் பதிவாகின்றன. வருடத்திற்கு 10 இலட்சம் வாகனங்கள் பதிவாகின்றன. பெட்ரோல், டீசல் இருக்கிற வரை சாரட் வண்டிகள் எல்லாம் எடுபடாது. அது இல்லையென்று சொன்னால்தான், இதுபற்றியே சிந்திக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்து நெரிசலைக் குறித்து பெரிய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், நாம் என்னதான் செய்தாலும், போக்குவரத்து நெரிசலுக்கு 3 துறைகள் பொறுப்பாகின்றன. ஒன்று, நெடுஞ்சாலைத் துறை; இன்னொன்று உள்ளாட்சித் துறை; மற்றொன்று போக்குவரத்துத் துறை. இந்த 3 துறைகளையும் நீங்கள் முத்தரப்புப் பேச்சுவார்த்தையின்மூலம், ஒவ்வொரு மாதமும் ஒருங்கிணைத்து, எங்கெங்கே ஆக்கிரமிப்பை எடுப்பது என்பது குறித்தும், போரூர் போன்ற Junction-லே பாலங்கள் கட்டுவது குறித்தும் முக்கியமான முடிவெடுக்க வேண்டும். இப்போது ஆட்டோக்களுக்கு நிறைய பெர்மிட் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு கருத்தை இந்த அவையிலே வெளியிட்டிருக்கிறீர்கள். ஆட்டோ பெர்மிட்டுகளை அதிகமாகக் கொடுக்கிறீர்கள் என்று சொன்னால், இன்னும்தான் நெரிசல் அதிகமாகுமே ஒழிய, நெரிசலைக் குறைக்க முடியும் என்று சொல்ல முடியாது. ஆந்திரா

2010 மே 4]

டெல்லி போன்ற பகுதிகளிலேனே, parking facilities இல்லாத இடங்களுக்கு registration-ஏ கொடுப்பதில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், parking facilities இருக்கிறவர்களுக்கு மட்டுந்தான் வண்டி registration செய்ய முடியும் என்கிற ஒரு திட்டத்தையாவது கொண்டு வந்து, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதந்தோறும் தன்னுடைய துறையின் சார்பாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், காவல் துறை அதிகாரிகளையும், நமது மாநகராட்சி அதிகாரிகளையும், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளையும் அழைத்து, எங்கெங்கே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அவற்றை நீக்குகின்ற பணியை மாதந்தோறும் அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். இப்போது திரு. பாபு அவர்கள் two wheeler போவதற்குத் தனியாக ஒரு பாதை அமைக்க முடியுமா என்று கேட்டார்கள். அது ஏற்கெனவே J.N.N.U.R.M.—ஜவஹர்லால் நேரு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இருக்கின்றது. அவர்களுடைய திட்டமே, பேருந்துக்கென்று தனிப் பாதை அமைத்து, அந்தப் பேருந்துப் பாதையை, சரிசெய்வதற்காகத்தான் அவர்கள் நிதியைத் தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால், இருக்கின்ற இட நெருக்கடியிலே, சாலையைப் பேருந்துக்கு மட்டும் என்று ஒதுக்குவது என்பது இயலாத காரணத்தால், அந்தத் திட்டம் இப்போது இங்கே செயல்படுத்தப்படவில்லை.

முற்பகல் 9-50

ஒரு உதாரணத்திற்காக முதலிலே, சென்னையிலே இருக்கின்ற அண்ணா சாலையில் காருக்கு என்றும், two wheeler-க்கு என்றும், ஆட்டோவுக்கு என்றும், பேருந்துக்கு என்றும், அந்தச் சாலை அகலமாக இருக்கின்ற சாலை என்ற காரணத்தால், அதற்குத் தனித்தனியாக ஒதுக்கப்பட்டன. அதுகூட அண்ணா சாலையில் மட்டும்தான் இருக்க முடியுமே தவிர, மற்ற இடங்களில் அதைச் செயல்படுத்துவதற்குரிய வாய்ப்பு இல்லை. எப்படி C.M.D.A. இருக்கிறதோ, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் இருக்கிறதோ, அதுபோலத்தான் Unified Metropolitan Transport

[2010 மே 4

Authority என்பது சட்ட அங்கீகாரத்தோடு செயல்பட வேண்டும்; அதிலே போக்குவரத்துத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர் அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மாநகர மேயர் போன்றவர்களையெல்லாம் கலந்து பேசி, மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் போட்டு, எங்கெங்கே, எதைச் செய்ய வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு, கடந்த 10 நாட்களுக்கு முன்புகூட கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே முடிவு எடுத்து, அதைச் செயல்படுத்த இந்த அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே இருக்கிற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு—கல்லூரி நேரங்களும், அலுவலக நேரங்களும், பொது மக்கள் பயணம் செய்கின்ற நேரங்களும் ஒரே நேரமாக இருக்கிறது. பள்ளி, கல்லூரிகளின் நேரத்தை மாற்றி, முன்னதாகவே கல்லூரிகளுக்குச் செல்கிற மாணவர்கள் அதேபோல, பள்ளிக்குச் செல்கிற மாணவர்களுடைய நேரங்களை மாற்றினால், நெரிசல் குறைகிற வாய்ப்பும் உருவாகும். மேலைநாடுகளைப் பார்க்கின்றபோது எப்படியிருக்கிறது என்று சொன்னால், ஒரு மாணவனை அவனுடைய பெற்றோர்கள் தங்களுடைய காரிலே அழைத்து வந்து தனியார் கல்லூரிகளிலே விட்டுவிட்டுச் செல்வதும், மீண்டும் அவர்கள் வேலைக்குச் செல்கிற நிலையும் இருக்கிறது. மாலையில் அழைத்து வருவதற்கும் கார் செல்கிறது. ஒரு கார் எடுத்துச் சென்று ஒரு குழந்தையை அழைத்துவரும் நிலையில் ஆயிரக்கணக்கான அத்தகைய கார்கள் தனியார் கல்லுரிகளுக்குச் சென்றுகொண்டிருக்கிற நிலையை மாற்றுகின்ற வகையில், தங்கள் குழந்தைகளை அந்தத் தனியார் கல்லூரிகளின் வாகனத்தின் மூலமாக அனுப்புவதற்கு பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்கினாலும் இந்த நெரிசலைக் குறைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா என்பதை உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்

2010 மே 4]

அவர்கள் சொல்கின்றபோது, கார்களை நிறுத்துவதற்கு parking place இருக்கின்றவர்களுக்கு மட்டும் registration கொடுக்க முடியுமா என்றவொரு கேள்வியைக் கேட்டார்கள். டெல்லி, ஆந்திரா போன்ற இடங்களில் இதுபோன்ற நிலை இருக்கிறது என்றும் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே அப்படியொரு திட்டம் இல்லை. ஆனால், இந்தப் பொருளைப் பற்றி 15 நாட்களுக்கு முன்னாலே நடைபெற்ற கூட்டத்திலே பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒரு கார் வைத்திருப்பார்களேயானால், அடுத்த கார் பதிவு செய்ய வருகின்றபோது கார் நிறுத்துவதற்கான இடத்தை நீங்கள் தர வேண்டுமென்பது இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் நடைமுறைப்படுத்துவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் சொல்கின்றபோது, பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்கப்படுமா அல்லது பள்ளி நேரங்களை மாற்றியமைக்க முடியுமா என்று கேட்டார்கள். ஏற்கெனவே இப்போது, கல்லூரிகளையெல்லாம் இரண்டு shift-க்குக் கொண்டு வந்துவிட்டார்கள். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆங்காங்கே இருக்கின்ற நிலைமைகளை ஆராய்ந்து, அரை மணி நேரம் முன்போ, பின்போ கல்லூரி நேரத்தையும், பள்ளி நேரத்தையும் மாற்றி வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இந்தக் குழந்தைகளையெல்லாம் பேருந்துகளிலே அழைத்து வருவதற்காக அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு, கடந்த ஆட்சிக் காலத்திலே பள்ளிப் பேருந்துக்கு ஒரு இருக்கைக்கு 150 ரூபாய் என்று நீங்கள் நிர்ணயித்திருந்தீர்கள், அதையெல்லாம் குறைத்து ஒரு இருக்கைக்கு 50 ரூபாய் என்ற வகையில் அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளையும் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியும் இந்தக் குழந்தைகளைப் பேருந்திலே அழைத்து வருவதற்காக, car, two wheeler என்று இல்லாமல், பேருந்துகளிலே அழைத்து வருவதற்காக, இந்த அரசு கிட்டத்தட்ட 40, 50 கோடி ரூபாய்க்கு அவர்களுக்கு சலுகை அளித்து, அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சொன்னதை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, அதை எப்படிச் செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கலாம்.

[2010 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், முன்வரிசையிலே உள்ளவர்களே எப்போதும் கேள்வி கேட்கிறீர்கள். பின்னாலே உள்ளவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க விடமாட்டேன் என்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுந்தாலே (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு வரவேற்பு அதிகமாகவே இருக்கிறது பேரவைத் தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற மாநகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ஏதுவாக மேலைநாடுகளில் இன்றைக்கு transmission system என்று தனித்தனியாக, ambulance என்று சொன்னால், அதற்கென தனி வழியாகவும், பாதசாரிகளுக்குத் தனி வழியாகவும், மிதி வண்டிகளுக்குத் தனி வழியாகவும், ஆட்டோ, மகிழுந்து, பேருந்து எனவும் வகைப்படுத்தியிருக்கிறார்கள். குறைந்தபட்சம் சென்னை போன்ற மாநகரங்களிலே சாலைகளை விரிவுபடுத்தி அதுபோன்ற system கொண்டு வருவது கடினம். ஆனால், இப்போது திருவள்ளூர் போன்று பக்கத்திலே இருக்கிற பிற மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளையும் சென்னை மாநகராட்சியிலே சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கிறபோது, குறைந்தபட்சம் நம்முடைய அரசு முன்கூட்டியே எச்சரிக்கையாக, கூடி வருகிற இந்த வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான ஒரு திட்டத்தை, இதற்கென்று தனித் தனிப் பாதைகளை, உள்ளடங்கிய பாதைகளை புறநகர் போன்று வளர்ந்து வருகின்ற நகராட்சிப் பகுதிகளிலே கொண்டு வருவதற்கும் ஆவன செய்வாரா என்று கேட்டுக்கொள்கிறேன். இருக்கிற பேருந்தை அதிகமாக விட்டுவிட்டு நெரிசல், இப்போது ஆட்டோவுக்கு வேறு பெர்மிட் கொடுத்துவிட்டீர்கள். அதனாலும் மிகவும் நெருக்கடி உண்டாகும். அதனாலே மாடிப் பேருந்துகளைக் கொண்டு வருவதற்கும் அரசிடம் திட்டம் இருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 மே 4]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அருகில் இருக்கின்ற சிங்கப்பூர் போன்ற நாடுகளில் 10,000 வண்டிகள் இருக்கின்றன என்று வைத்துக்கொண்டால், அந்த 10,000 வண்டிகளில் ஒரு வண்டி குறைந்தால்தான் அடுத்த வண்டியைப் பதிவு செய்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்ற ஜனத் தொகைக்கு அதுபோலச் செய்வது என்பது இயலாத காரியம். மேலும், சென்னையிலே பாலம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலத்தின் பக்கமாக இருக்கின்ற 100 அடி, 200 அடி சாலையை அகலப்படுத்துவதற்கு, அதற்காகத் தருகின்ற தொகை ரூ. 8 கோடி, ரூ. 10 கோடி என்று செலவாகிறது. எனவே, ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு lane என்ற வகையிலே கொண்டு வர முடியுமா என்றால், அதிகமான பொருள் செலவுகள் ஏற்படும். இங்கே அதற்காகத்தான் அந்த Unified Metropolitan Transport Authority—யிலே இதைப் பற்றி ஆய்வு செய்ய, பல வல்லுநர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தறிந்து இந்த அரசு செயல்படும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பஸ் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்கிறார். உதாரணத்திற்கு, தஞ்சாவூர் to பட்டுக்கோட்டை பஸ் கட்டணம் 11 ரூபாய். காலையில் ஒரு பேருந்து சென்றால், பட்டுக்கோட்டையைச் சென்றடைந்தவுடன், ஒரு சாக்குக் கட்டியில் "Express" என்று எழுதி, திரும்பி வரும்போது 14 ரூபாய் வசூலிக்கிறார்கள். இதுபோல்தான் தமிழ்நாடு முழுவதும் மறைமுகமாக பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது பற்றிய கேள்வி. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.